சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO. **289 / 2022**

மனுதாரர் / எதிர்மனுதாரர் **ம.சா.1**வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி.V.தனம் அவர்களால் 44/1969 பிரிவின்படி **01.10.2024** ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

பெயர் :	முத்துகுமார்	கிராமம் :	
த/பெ :		வட்டம் :	
மதம் :		தொழில்:	
ஜாதி :		வயது :	

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1) முதல் தகவல் அறிக்கை - ம.சா.ஆ.1

2) Discharge Summary – ம.சா.ஆ.2 (இரண்டு எண்ணிக்கைகள்)

3) மருத்துவ பில்கள் - ம.சா.ஆ.3

4) மனுதாரர் காயங்களின் புகைப்படங்கள் - ம.சா.ஆ-4

5) எக்ஸ்ரே - ம.சா.ஆ.5 (ஏழு எண்ணிக்கைகள்)

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் திருச்சியில் குடியிருந்து வருகிறேன். நான் விராலிமலையில் மலேசியன் ஸ்டில் கம்பெனியில் வேலை பார்த்தேன். அதற்கான ஆவணங்கள் எதனையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தின் பொழுது எனது மாத வருமானம் சுமார் 30,000. அதற்கான ஆவணங்கள் எதனையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி சங்கதி உண்மையில்லை என்றால் சரியல்ல. நான் விபத்து நடந்த சமயத்தில் நான் பேருந்துக்குள்ளே தான் பயணித்தேன். விபத்தானது டோல்கேட்டில் இருந்து சுப்பிரமணியாபுரம் செல்லும் வழியில் விபத்து ஏற்பட்டது. மேற்படி நான் பயணித்த பேருந்தானது சுப்பிரமணியாபுரம் பேருந்து நிறுத்தத்தில் ஆட்கள் ஏற்றிஇறக்கி செல்லவேண்டும் என்றால் சரிதான். நான் பேருந்தில் முன் படிக்கட்டில் நின்றுக்கொண்டு பயணித்தேன் என்றால் சரியல்ல. நான் முன் படிக்கட்டின் மேற்பகுதியில் நின்றுக்கொண்டிருந்தேன். நான் போலீசாரிடம் கொடுத்த புகாரிலேயே நான் பேருந்தில் முன் படிக்கட்டில் நின்றுக்கொண்டு பயணித்ததாக தான் கூறியுள்ளேன்என்றால் சரியல்ல.

பேருந்து நிற்பதற்கு முன்னரே நான் தான் அவசர கதியில் கீழே இரங்கியதால் தான் நிலை தடுமாறி கீழே விழுந்து விட்டேன் என்றால் சரியல்ல. ஓட்டுநரும், நடத்துனரும் என்னை படிக்கட்டில் நின்று பயணிக்க வேண்டாம் என எச்சரித்த பின்னரும் நான் படிக்கட்டில் நின்று பயணித்தால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி விபத்திற்கு பேருந்து ஓட்டுநர் பொறுப்பாளியில்லை என்றால் சரியல்ல. குற்ற வழக்கில் நான் இன்னும் சாட்சியம் அளிக்கவில்லை. வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு அதிகமானது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஓம்/-(ஈ. முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.